சுருக்கம்

2012 - 2013 ஆம் கல்வியாண்டிற்கான ஆசிரியர் காலிப்பணியிடங்கள் நிரப்புதல் தொடக்கக்கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பள்ளிகளில் காலியாகவுள்ள, தலைமை ஆசிரியர், அனைத்து வகை பட்டதாரி ஆசிரியர், இடைநிலை ஆசிரியர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அனுமதி அளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

பள்ளிக்கல்வித்(வ.செ.2)துறை

அரசாணை (நிலை) எண். 178 நாள். 12.07.2012

தொடக்கக்கல்வி இயக்குநரின் கடித ந.க. எண். 10220 / டி1 / 2012, நாள். 10.04.2012

ஆணை :-

தொடக்கக்கல்வி இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடித்தத்தில், தொடக்கக்கலவித்துறையின் கீழுள்ள தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 2012-2013 ஆம் கல்வியாண்டில் 01.06.2012 அன்று நிரப்பத் தகுதியுள்ள தலைமை ஆசிரியர், அனைத்து வகை பட்டதாரி ஆசிரியர், இடைநிலை ஆசிரியர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் காலிப்பணியிடங்களை உரிய விதிமுறைகளின்படி பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனம் மூலம் நிரப்பிக் கொள்ள அரசின் அனுமதியைக் கோரியுள்ளனர்.

தொடக்கக்கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, அரசு தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 01.06.2012 அன்றைய நிலவரப்படி ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களை, பின்வருமாறு பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனம் மூலம் நிரப்பிக்கொள்ள தொடக்கக்கல்வி இயக்குநருக்கு அரசு அனுமதியளிக்கிறது.

1. தலைமை ஆசிரியர் பணியிடங்கள்

| வ.எண் | ஆசிரியர் வகை | பதவி உயர்வு | மொத்தம் |
|---|---|---|---|
| 1. | நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் | 396 | 396 |
| 2. | தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் | 617 | 617 |

2. பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள்

| பட்டதாரி ஆசிரியர்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| பாடவாரியாக / எண்ணிக்கை | | | | | |
| | நேரடி நியமனம் (தமிழ்வழி) | சிறுபான்மைமொழி (தெலுங்கு, உருது, மலையாளம், கன்னடம்) | நேரடி நியமனம் (மொத்தம்) | பதவி உயர்வு | மொத்தம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| கணக்கு | 55 | 8 | 63 | 64 | 127 |
| அறிவியல் | 99 | 7 | 106 | 105 | 211 |
| ஆங்கிலம் | 175 | 6 | 181 | 181 | 362 |
| சமூக அறிவியல் | - | - | - | 27 | 27 |
| தமிழ் | - | - | - | 22 | 22 |
| | 329 | 21 | 350 | 399 | 749 |

**சிறுபான்மை மொழி பட்டதாரி ஆசிரியர்கள்**

மேலே குறிப்பிட்டுள்ள 21 சிறுபான்மை மொழி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான விவரங்கள் பின்வருமாறு

| | **தெலுங்கு** | **உருது** | **மலையாளம்** | **கன்ன்டம்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| கணக்கு | 4 | 2 | 1 | 1 | 1 |
| அறிவியல் | 4 | 1 | 1 | 1 | 7 |
| ஆங்கிலம் | 3 | 1 | 1 | 1 | 6 |
| **மொத்தம்** | | | | | 21 |

**3. இடைநிலை ஆசிரியர் பணியிங்கள்**

| **வ.எண்** | **மொழிவாரியாக** | **நேரடிநியமனம்** |
|---|---|---|
| 1. | தமிழ் | 3378 |
| 2. | தெலுங்கு | 32 |
| 3. | உருது | 12 |
| 4. | மலையாளம் | 6 |
| 5. | கன்னடம் | 5 |
| | மொத்தம் | 3433 |

**4. உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்கள்**

| இனம் | 01.06.2012 நிலவரப்படி காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை | நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படவேண்டியவை | பதவி உயர்வு மூலம் நிரப்பப்படவேண்டியவை |
|---|---|---|---|
| உடற்கல்வி ஆசிரியர்கள் | 11 | 11 | - - |

3. மேற்காண் காலிப்பணியிடங்கள் அனைத்தும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு, தொடக்கக்கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**த. சபிதா**

**அரசு முதன்மைச் செயலாளர்**